**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22–ஆம் நாள் புதன்கிழமை**
**அசல் வழக்கு எண் – 96/2010**
**CNR No: TNAL050000092010**

1. சேதுராமன்
2. மதுராம்பாள்
3. மலர்மணம்
4. மாலாதேவி
5. சிவகங்கை
6. ராவணன்
7. பாக்கியலெட்சுமி
8. கௌரி
9. பத்மநாபன்
10. வெண்ணிலா
11. முத்து – வாதிகள்

/எதிர்/

சீதா – பிரதிவாதி

Amended as per order in I.A.751/2017, Dated:03.10.2017.

தாவா சொத்து இறந்த 1–ம் வாதிக்கு சொந்தம் என்று தாவாச் சொத்தில் இறந்த 1–ம் வாதிக்குள்ள உரிமையை விளம்புகை செய்து, அதன் தொடர் பரிகாரமாக இறந்த 1–ம் வாதியின் அனுபவத்தில் இருந்து வந்த தாவா சொத்தில் பிரதிவாதியோ அவரது ஆட்களோ, வாரிசுகளோ தாவா சொத்தில் தலையீடு செய்யாமல் இருக்க பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத்தொகை வாதிகளுக்கு கிடைக்கவும், இன்னும் கோர்ட்டாருக்கு யுக்தமாக தோன்றும் யாவொத்த இதர பரிகாரங்கள் வழங்கியும் தீர்ப்பு செய்ய வாதிகள் பிரார்த்தித்துக் கொள்கின்றார்கள்.

(Amended as per order in I.A.588/12, dated:12.09.2012)

இவ்வழக்கானது 22.02.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பிரான்சிஸ் சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## <u>தீர்ப்புரை</u>

வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். கடந்த 15.03.2011–அன்று எழுவினாக்கள் வனையப்பட்டன. வாதி தரப்புக்கு பல வாய்ப்புகள் வழங்கப்பட்டும் விசாரணை நடத்த வாதி தயாராக இல்லை. இவ்வழக்கு நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள வழக்குகளின் கீழ் வரும் நிலையில் இவ்வழக்கை மேற்கொண்டு நடத்த வாதி தரப்பில் ஆர்வம் காட்டாததால் நீதியின் நலன் கருதி இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

<u>வாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

–இல்லை–

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:

–இல்லை–

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

(ஒப்பம்)திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.